Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 30 சனிக்கிழமை (14.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 227

# நிபந்தனையற்ற பேச்சுக்கு மட்டுமே அரசாங்கம் தயார் என அறிவிப்பு



## தாம் காத்திருந்த காலம் இது என்கிறார் ஜெயராஜ்

கொழும்பு, ஜூலை 14

"கிழக்கை இராணுவ ரீதியில் வெற்றி கொண்டு மிகவும் பலம் வாய்ந்த நிலையில் அரசு இருக்கின்றது. இந்தப் பின்னணியில் நிபந்தனையற்ற முறையில் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயார்.

மாறாக, புலிகள் அரசுக்கு நிபந்தனைகளை விதித்துப் பேச்சுக்கு வர முயற்சித்தால் அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது. பலம் பெற்ற நிலையில் இருந்து கொண்டே புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதற்காகவே இதுவரை காலமும் அரசு காத்திருந்து. அதற்குக் காலம் கனிந்துவிட்டது.

-இவ்வாறு அறிவித்திருக்கின்றார் அரச நாடாளுமன்றக் குழுவின் பிரதம கொரடா அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

நேற்று கொழும்பில் அரசதகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:-

தொப்பிகலவைக் கைப்பற்றி வெற்றிவாகை சூடிநிற்கும் அரசு, புலிகளுடன் சமாதானப்பேச்சுக்குச்செல்லத்தயாராகவே உள்ளது.

அரசு வெற்றியடைந்திருக்கும் இந்நிலையில், புலிகளினால் எதுவித நிபந்தனைகளும் விதிக்கப்படாத சமாதானப் பேச்சுக்கு அரசு இணக்கம் தெரிவிக்கின்றது.

கிழக்கை முழுமையாக கைப்பற்றியதன் மூலம் இதுவரை ஆட்சி செய்த அரசுகளிலே பலம் மிக்க அரசு இதுவே என்பதைத் தற்போதைய அரசு நிரூபித்துள்ளது.

புலிகளின் அரசியல் துறைப் பேச்சாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசுடனான சமாதானப்பேச்சுக்குஇனி இடமில்லைஎன்று தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் புலிகளுக்கு சமாதான முயற்சிகளில் உடன்பாடில்லை என்பது வெளிப்படுகின்றது - என்றார் அவர். (சி)

# மூன்று மாதத்தில் கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் கருணா குழு, புலிகளும் கூடப் பங்குபற்றலாம்!

## அரசுத் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை14

கிழக்கு மாகாணம் புலிகளின் பிடியிலிருந்து முழுமையாக விடுவிடுக்கப்பட்டிருப்பதால், மூன்று மாதங்களில் அங்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. அத்தேர்தல்களில் கருணா குழு, புலிகள் ஆகிய தரப்பினரும் விரும்பினால் போட்டியிடலாம்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கை தற்போதுமுழுமையாக மீட்டுள்ள நிலையில் அங்கு மாகாண சபைத் தேர்தல் ஒன்றை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

அந்தத் தேர்தலில் கருணா அணியினரும் போட்டியிட விரும்பினால் அதற்கு அரசு ஒருபோதும் தடையாக இருக்காது. புலிகளும் ஜனநாயகத் தேர்தலில் இணைய வேண்டும் என்பதே அரசின் விருப்பம். அவர்களும் அரசுடன் சமாதானமாகி, இந்த மாகாணசபைத் தேர்தலில் பங்குகொள்வார்களானால் அது அரசிற்கு மகிழ்ச்சி தரும் விடயம்.

அரசு கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் ஒன்றை (08ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கை நோக்கி காலை முதல் ஷெல் தாக்குதல்

கிளிநொச்சி, ஜூலை14

வடமராட்சி கிழக்குப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை தொடக்கம் ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நாகர்கோயில், முகமாலை படைமுகாம்களில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வத்திராயன், செம்பியன்பற்று, மாமுனை, தாழையடி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதனால் பல வீடுகள் சேதமடைந்தன. எனினும் பொது மக்களுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. (அ-1)

## இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் இன்று எதிர்ப்புப் பேரணி

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் பிரமாண்டமான மக்கள் பேரணி ஒன்று இன்று சனிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை ரபல்கார் சதுக்கத்தில் பேரணி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனின் பல பகுதிகளில் இருந்தும் ஒன்று திரழும் ஈழத் தமிழர்கள் இலங்கை அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் எழுப்பவுள்ளனர்.

லண்டனில் ஈழத்தமிழர்கள் பேரணியை நடத்துவதற்கு லண்டன் ஆளுநர் கென்லி வின்ஸ்ரோன் அனுமதி வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையை அடுத்து கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு, ஜூலை 14

பொருளாதார நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என விடுதலைப் புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து கொழும்பு மாநகரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய கேந்திர நிலையங்களில் புதிய சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வீதிகளில் செல்லும் வாகனங்கள் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றன.

படையினரும் பொலிஸாரும் கூட்டு ரோந்து; தேடுதல்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தப்பாதுகாப்புஏற்பாடுகள்தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்குரிய பொதிகள் காணப்பட்டால் தகவல் தரும்படி பொலிஸார் மக்களிடம் கோரியுள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் அச்சுறுத்தல் காரணமாக மூவர் சரண்

யாழ்ப்பாணம், ஜூலை 14

உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைவோர் எண்ணிக்கை குடாநாட்டில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.

நேற்று முன்தினம் இருவரும் நேற்று ஒருவரும் என்று மூவர் அடுத்தடுத்து சரண் அடைந்தனர். சரண் அடைந்தவர்களில் இருவர் யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா முன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிராம மட்டத்தில் அரசியல் அதிகாரங்களை பரவலாக்கும் தீர்வுமுறை அ.க. குழுவினால் சிபார்சு

கொழும்பு, ஜூலை 14

கிராம மட்டத்தில் அரசியல் அதிகாரங்களை பரவலாக்கும் தீர்வு ஒன்றை உருவாக்க அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு பரிந்துரைத்துள்ளது.

கடந்த சில நாள்களாக அதிகாரிகள் குழு ஒன்று இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண நேற்றுத் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின்போது இந்திய அரசமைப்பு, பிராந்திய அரசுகளின் அரசமைப்பு ஆகியன தொடர்பாக குழு ஆராய்ந்தது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருப்ப

(08ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமத்தில் 18 பேர் கைது

கொழும்பு, ஜூலை 14

கதிர்காமம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை படையினரும் பொலிஸாரும் இணைத்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 18 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களுள் இரு பெண்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமது அடையாளத்தை நிரூபிக்கத் தவறியமையாலேயே கைது செய்யப்பட்டார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## பாக். அதிபருக்கு எதிராக பாலாவியில் ஆர்ப்பாட்டம்

### முஷாரப்பின் கொடும்பாவியும் எரிப்பு

புத்தளம், ஜூலை 14

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரிலுள்ள செம் மசூதியை பாகிஸ்தான் இராணுவம் முற்றுகையிட்டுப் பின்னர் உள்ளே புகுந்து நடத்திய இராணுவத் தாக்குதல் கொடூரத்துக்கு எதிராக, நேற்று வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகையின் பின்னர் புத்தளம் பாலாவியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பெரும் எண்ணிக்கையிலான மக்களும் அரபு மதரஸா மாணவர்களும் இதில் கலந்து (08ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி தொப்பிகல விஜயம்

கொழும்பு, ஜூலை 14

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று தொப்பிகலவிற்கு விஜயம் செய்து தொப்பிக்கலவைக் கைப்பற்றப் பாடுபட்ட படையினருக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இராணுவத் தளபதியுடன் பிரதம பாதுகாப்பு அதிகாரி எயார் மாஷல் டொனால்ட் பெரேராவும் மேலும் சில இராணுவ அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

தொப்பிகலவைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இராணுவத் தளபதி அறிவுரைகளை வழங்கினார். (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ரெலோ அலுவலகம் மீதான தாக்குதலுக்கு கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, ஜூலை14

நேற்றுமுன்தினம் வவுனியா பண்டாரிக்குளம், அம்மன் கோயில் வீதியில் அமைந்துள்ள தமீழிழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்துக்குள் படைத்தரப்பினர் பிரவேசித்து தேடுதல் நடத்தியதையும் அங்கிருந்த இயக்க உறுப்பினர் ஒருவரைச் சுட்டுக்கொன்றதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அறிக்கை ஒன்றின் மூலம் மிக வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ இயக்கம் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி. அரசியல் கட்சி அலுவலகத்துக்குள் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகங்களில் எழுதுநர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இலங்கை அபிவிருத்தி நிர்வாக பணியகத்தால் (Sri Lanka Institute of Development Administration) 2007.07.15 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) எமது சுன்னாகம் இலங்கை மின்சார சபை அலுவலகத்தில் நடாத்தப்படவிருந்த எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

பிரதிப் பொது முகாமையாளர்
(வடமாகாணம்)

பிரதிப் பொது முகாமையாளர்
வடமாகாண அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
500, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-52911)

## வணிகப் பீட மீள்பரீட்சை திங்கள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடத்தின் மீள் பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாக வுள்ளன என வணிக முகாமைத் துவ பீடாதிபதி க.தேவராஜா தெரிவித்தார்.

பழைய பாடத் திட்டத்தின்படி நடைபெறும் மீள்பரீட்சைக்கான நேர அட்டவணைகள் மற்றும் தகவல்களை முகாமைத்துவ பீடத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (202-79)

## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



கோணாவளை வீதி,
கொக்குவிலைச் சேர்ந்த
சிவகுமன்- ஜெயலக்ஷ்மி
தம்பதியரின் செல்வப்புதல்வன்
ஜெயருக்ஷன்
தனது 3 ஆவது பிறந்தநாளை இன்று (14.07.2007) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். ருக்ஷன் குட்டியை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா லண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, தம்பி கவின், ரமணன் மாமா, சித்தி, சித்தப்பா, சுதன் மாமா, கோன் மாமா, ரஞ்சா சித்தப்பா, ஐங்கி சித்தப்பா மற்றும் அனைவரும் விஷ்ணு பெருமான் அருளால் சகல செல்வமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
கோணாவளை வீதி,
கொக்குவில்.
அப்பா, அம்மா
(ரூபன், கவி). (62524)

ஜெயருக்ஷன்

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று (14.07.2007) சனிக்கிழமை நடைபெற விருந்த யா/வட.இந்து மகளிர் கல்லூரியின் 2007ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. அதிபர் ம.கணபதிப்பிள்ளை அவர்களின் அகால மரணம் காரணமாக 04.08.2007ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது

அதிபர்,
யா/வட. இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை. (சி-52912)

## அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் -2007

15.07.2007 ஞாயிறு கொடியேற்றம் (காலை 9 மணி)
26.07.2007 வியாழன் வசந்த உற்சவம்
27.07.2007 வெள்ளி வேட்டை, சப்பரம்
28.07.2007 சனி இரதோற்சவம் (தேர்) காலை 9 மணி
29.07.2007 ஞாயிறு சமுத்திரத் தீர்த்தமும் கொடியிறக்கமும்

பரிபாலன சபையினர்

## ஸ்கந்தவரோதயா கல்லூரி சுன்னாகம்
## 113ஆவது ஆண்டு நிறுவுநர் நினைவு நாள் நுழைவாயில் திறப்பு விழா, பரிசளிப்பு விழா- 2007

காலம்: நாளை (15.07.2007) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: ஒறேற்றர் மண்டபம்
தலைவர்: திரு.க.சிவாஜி (அதிபர்)
ஆசியுரை: அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P) [தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை]
பிரதமவிருந்தினர்: உயர்திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள் [கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்]
நினைவுப்பேருரை: Dr.M. கதிர்காமநாதன் அவர்கள் [தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்பு]
பரிசில் வழங்கல்: திருமதி தவமணி விக்னேஸ்வரன் அவர்கள்
நிறைவுரை: திரு.ஆறு திருமுருகன் அவர்கள் (உப அதிபர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம். (62689)

## KATHIRAVAN PC AND ELECTRONICS WORKSHOP
### நடமாடும் சேவை

மொனிற்றர், ஸ்கானர், பிறின்டர், யு.பி.எஸ், சி.பி.யு என்பன சிறந்த முறையில் திருத்தி உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

KATHIRAVAN PC WORKSHOP,
KOPAY NORTH, KOPPAY.
T.P.: 0779263604 (62647)

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 02 . 12 . 1925



உதிர்வு 25 . 06 . 2006

அமரர் கந்தையா கிட்டப்பா
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)
திதி: 14.07.2007

எல்லோர்க்கும் நல்லவராய் அன்பு தந்து
ஆனந்தமாய் வளர்த்த எங்கள் ஐயாவே!
பிரிவு எம்மை வாட்டுதையா...
பக்கத்திலிருந்தாலும் எம் குரல் கேட்க
வேண்டுமென்று ஆசையுடன் அழைப்பீர்களே
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
எமதன்பும், உங்கள் அன்பும் என்றும்
நினைவில் நிலைத்திருக்கும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

81, மயிலணி,
சுன்னாகம். (65595)
உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## Sky Computer Systems

நீங்கள் மலிவு விலையில் கொம்பியூட்டர் ஒன்றையும், Printer, UPS, Monitor, போன்ற மற்றும் பொருட்களை வாங்கவும், கொம்பியூட்டர் சம்பந்தமான விடயங்களை (DTP, M/O, I/Mail, H/W, Q/Book) கற்றுக்கொள்ளவும் விரையுங்கள்

**Sky Computer (Pvt) Ltd,**
**89,Kandy Road**
**Chundikkuli**
**Jaffna.**
**T.P No:-0212229109**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
யாழ் கச்சேரிக்கு அருகில்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் கரத்தில் 07 - 07 - 1975



அம்மனின் பாதத்தில் 17 - 06 - 2004

கந்தையா சிவகுமார்
(செல்வம்)
திதி: அமாவாசை 14-07-2007

சிரித்த முகம் கண்டு
ஆனதையாக மூன்றாண்டு
சிந்தை கலங்குகின்றோம்
வாராயோ மீண்டும் எம் செல்வமே!

ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்:
வாரகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு. (62648)
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

A-9, கண்டிவீதி, அரியாலை நடுத்தர வீதியில் பனை தென்னை அபிவிருத்திச் சங்கத்திற்கு அருகில் 1¾ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ள வேண்டிய T.P.No. 0773675104, 0776670175 (62669)

## ஓராண்டு நிழலாடல்



அமரர்
மகேந்திரநாதன் சுஜீபன்
(அமெரிக்கா - நியூயோர்க் பல்கலைக்கழக மாணவன்)

மண்ணுலகில் 1982.12.07
விண்ணுலகில் 2006.06.24

ஆண்டொன்று.....
ஆனாலும் உன் நினைவு ஆறவில்லை
காண மனம் துடிக்கிறது...
கூடிப் பிறப்பதற்கோ... கும்மாளம் அடிப்பதற்கோ...
இனியெங்கே சேர்வோமையா?
காலமெலாங் கதற
கண்ணீருஞ் சோறுமுண்ண
தண்ணிய வெம்மையெல்லாம்
நடுவிலே விட்டு ஐயா?
ஆராத எம்மனதை ஆற்றுவிக்க நம் வாழ்வின்
பேராய நல்லாயாக் கடவையுறும் ஐங்கரனை
தூராய மலர்கொண்டு துதிக்கின்றோம் எந்நாளும்
நாராய மலர்போல நற்றாளில் நீ வாழி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆஸ்பத்திரி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (62646)
குடும்பத்தினர்.

## விண்ணப்பப்படிவம்

வடக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் வர்த்தமானியுடன் சில்லறை விலை 10/-

எஞானம்ஸ் பிறிண்டர்ஸ்
237, கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம். (62663)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கணேஸ்வரி தர்மராஜா (சுகந்தா)

தோற்றம் 04-11-1956
மறைவு 15-06-2007

பாசத்தின் உறைவிடமே சுகந்தா!
உங்கள் உயிருக்கு உயிரான கணவர்
நெஞ்சம் பதறித் துடித்திருக்க
பெற்ற மகளை பறிகொடுத்த தாயோ
கண்ணீருடன் கதறித் துடிக்க
பாசமிகு சகோதரர்கள் பரிதவித்திட
நீங்கள் கூறும் அன்பு வார்த்தைகளுக்காக
மைத்துன, மைத்துனியர் கலங்கிட
கண்டிப்பான வழி நடத்தலுக்காக
பெறாமக்கள், மருமக்கள் ஏங்கித் தவித்திட
எம்மையெல்லாம் கலங்க வைத்துவிட்டு
கானல்நீர் போல் மறைந்து விட்டீரே...
உங்களது பாசப்பிணைப்பு எம்மை உருக்குகிறது
உங்கள் நினைவுகள் ஏழேழு ஜென்மத்திற்கும்
எங்களுடன் உறவாடிக் கொண்டிருக்கும்.

(இந்த அழைப்பை ஏற்று நாளை (15-07-2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.)

'துர்க்கா இல்லம்',
26/5, பிரம்படி லேன், கொக்குவில். (62624)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடிப் பேச்சுக்கு முந்திய பேச்சை உடனடியாக ஆரம்பிப்பது அவசியமென வலியுறுத்துகிறார் ஆயர்



கொழும்பு,ஜூலை 14

இலங்கையில் எங்கு பார்த்தாலும் வன் செயல்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன. அந்த வன்செயல்கள் நிறுத் தப்படவேண்டும். நேரடிப் பேச்சுக்கு முந்திய பேச்சை உடன் ஆரம் பிப்பது அவசியம்.

மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை மேற்கண்டவாறு வலியுறுத்தியுள் ளார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்று முன் தினம் வழங்கிய செவ்வியில் அவர் இப்ப டிக் கூறியுள்ளார். அச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையில் தற்போதைய நிலைமை சஞ்சலத்தையும் விரக்தியையும் ஏற்படுத்து கிறது.

இலங்கையில் எங்கு பார்த்தாலும் வன் செயல்கள் தலைதூக்கியுள்ளன. அதை நிறுத்தி பேச்சுவார்த்தைகளுக்கு போக வேண்டும் என்கிற எண்ணம் அரசாங்கத் திற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

வடக்குக் கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பில் வாழும் தமிழ் மக்களும் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தை கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என கருது கிறார்கள். யுத்த நிறுத்தம் வந்தால் மக்களி டையே ஒரு நம்பிக்கை ஏற்படும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் பலப் படுத்துவதில் இலங்கை அரசு மற்றும் விடு தலைப் புலிகள் ஆகிய இரு தரப்பாருக்கும் கடமையுள்ளது.

வெளிநாட்டு உதவி தேவையென்றால் இலங்கை அரசு யுத்த நிறுத்த உடன்படிக் கையை உறுதிப்படுத்த வேண்டும். சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் மீது எந்த வகை யிலாவது யுத்த நிறுத்த உடன்படிக்கையின் தேவையை உணர்த்த வேண்டும்.

யுத்த நிறுத்தத்தை இருதரப்பாரும் ஆத ரிக்க வேண்டும் என நோர்வே தொடர்ந்து கூறிவந்தாலும் அது தொடர்பில், விடுத லைப் புலிகள் தரப்பிலிருந்து உரிய சமிக் ஞைகள் வரவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

பேச்சுவார்த்தைகளுக்கு முந்தைய பேச்சு வார்த்தைகள் உடனடியாக ஆரம்பிப்பது அவசியம்.

இலங்கையில் பேச்சுவார்த்தைகள் மூலமே சமாதானத்தை கொண்டுவர முடியும். யுத்தத் திலே ஈடுபட்டு மனித உரிமை மீறல்களைச் செய்து அதன் மூலம் சமாதானத்தை ஏற்ப டுத்த முடியாது என்பதனை போப்பாண்ட வர் இலங்கை ஜனாதிபதி அண்மையில் அவரைச் சந்தித்தபோது தெளிவாகக் கூறியி ருந்தார் என மட்டக்களப்பு ஆயர் தெரிவித்தார்.

போப்பாண்டவரின் அந்தச் செய்தியா னது ஜனாதிபதி மீது ஒரு தாக்கத்தை ஏற்ப டுத்தும் என தாம் நம்புகின்றேன் - என்றார். (1)

## உயர்தர மாணவருக்கு பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை14

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகம், ஐய னார் சனசமூக நிலையம் என்பன இணைந்து உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாண வர்களுக்கு பயிற்சிப் பரீட்சை ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடத்த வுள்ளன.

இராமநாதன் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் நடத்தப்படவுள்ள இப்பரீட்சையில் மாண வர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட் கப்பட்டுள்ளது. (203)

## வணிகக் கல்விப் போட்டி நாளை

வலி.தென்மேற்கு,ஜூலை14

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக் கிடையிலான வணிகக் கல்விப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள் ளன. (203-135)

## மட்டுவில் உள்ள உரக் களஞ்சியம் கால்நடைகளின் தங்குமிடமாகியது

மட்டுவில் சந்திரபுரத்தில் அமைக்கப்பட் டுள்ள உரக் களஞ்சியம் இரவு நேரத்தில் கால் நடைகளின் தங்குமிடமாக மாறியுள்ளது.

விவசாயத் திணைக்களத்தால் நிர்மாணிக் கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த இக்கட் டடம் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தினால் சேதமடைந்தது.

பிரதேச விவசாய சம்மேளனங்களின் வேண்டுகோளுக்குப் பின்னர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் இது புனரமைக்கப் பட்டது.

தென்மராட்சிப் பிரதேச நெற்செய்கை மற் றும் விவசாயத் தேவைகளுக்காக உரவகை கள் அந்தந்த கமநல சேவைகள் திணைக் கள பெரும்பாக உத்தியோகத்தர் அலுவல கங்களில் வைத்து வழங்கப்படுகின்றன.

சாவகச்சேரி, கல்வயல், மட்டுவில், கெரு டாவில் ஆகிய இடங்களின் விவசாயிக ளுக்கு கைதடி, மீசாலை, புத்தூர்சந்தி ஆகிய இடங்களில் உள்ள கமநல நிலையங்களில் உரவகைகள் விநியோகிக்கப்படுகின்றன.

விவசாயத் திணைக்கள வாகனங்களில் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படும் உரவகைகளை மட்டுவிலில் உள்ள இந்த களஞ்சியத்தில் வைத்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் பட்சத்தில் அப் பகுதி விவசாயிகளுக்கு ஏற்படும் பொருள் செலவு பெருமளவு குறையுமென விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்

ஆயினும் இக் கட்டடம் இரவு நேரங்க ளில் ஆடு, மாடு போன்ற கால்நடைகள் தங் கும் இடமாக மாறியுள்ளமை விவசாயிகள் தரப்பில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (202-207)

## பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் 108 ஆவது பிறந்த தினம் நாளை



யாழ்ப்பாணம்,ஜூலை 14

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 108 ஆவது பிறந்த தின விழாவும் திருவருட்பயன் உரைநூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

பண்டிதை பொன். பாக்கியம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முன்னதாக காலை 9.30 மணிக்கு வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் வழிபாடு இடம்பெறும்.

தொடர்ந்து தேவார இசைமணி தாவடியூர் எஸ்.ஆர்.திருஞான சம்பந்தன் திருமுறை ஓதுவார்.

பண்டித மணியின் உருவப்படத்திற்கு சைவப்புலவர் பண்டிதர் இ.செல்லத்துரை மலர் மாலை அணிவிப்பார்.

தொடர்ந்து திருவருட்பயன் உரைநூலை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலை வர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா வெளியிட்டு வைக்க முதற்பிரதியை ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர் கந்தையா பேரம்பலம் பெற்றுக்கொள்வார்.

நூல் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் சைவப் புலவர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் வேலணையூர் பண்டிதை தம்பு வேதநாயகி அம்மையாரின் நினைவுரை யும் இடம்பெறும்.சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலய அதிபர் பொன்னம்ப லம் அருணகிரிநாதன் இந்த நினைவுரையை நிகழ்த்துவார். (203)

## சமய சந்நிதிகளில்

நல்லூர்,ஜூலை 14

நல்லூர் பாலகதிர்காம ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று 14ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை வரை 17 தினங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 4.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி நடைபெறும். (203-111)

* * *

யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலய அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிசேகமும் 12 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

இறுதிநாளன்று காலை 8.30 மணிக்கு சங் காபிஷேகமும் 12 மணிக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். அன்று மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ரத பவனி இடம்பெறும். (203)

## சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இன்று பரிசில்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் பெறு வதற்குத் தெரிவானவர்களுக்கு இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 269 மாணவர்களில் ஒரு தொகுதியினரின் பெயர்கள் பிரதேச ரீதியாக நேற்றைய உதயனில் வெளியாகின.

ஏனையோரின் விவரம் வருமாறு-

**தெல்லிப்பழை**

எம்.ரூபினா ஜோன்டொலின், பி.தர்சிகா, எஸ்.ஜீவிதா, எஸ்.டயஸ், எஸ்.பிருத்திகா, பி. திவ்வியா, ஆர்.சர்மிளா, எஸ்.கவாஸ்கர், எம். ராஜாந்தன், கே.ரஜீவன், ஏ.சாந்தினி, எஸ். ரகிதா, எஸ்.றெஸ்மன், எஸ்.சகாபறாகினி, ரி. றேகா, கே.பிரியதர்சினி, எஸ்.சபரிதன், கே. அபிராமி, ரி.சஜீபன், கே.சுதாஜினி, ரி.பிரதீபன், கே.நிவாசினி, என்.யாதவன்.

**யாழ்ப்பாணம்**

கே.செல்ரன், ஜே.என்.ஜோய் ராஜ்மன், ஆர்.பி.றோசாந், ஆர்.ஏ.பிரதீஸ், கே.மேரியு தேனா, ஜே.நிறோசன், பி.கஜானன், எம். றேனுகா, ரி.டயானா, பி.அன்னராஜா, எஸ். பிறிந்துஷா, ரி.தயாகரன், என்.புவனேந்தி ரன், கே.மயூரி, ஜே.கேதாரமிலா, ஜெ.அஜன் தினி, ஆர்.றாஜினி, வி.சிவகௌரி, எஸ். தேவதர்சினி, எஸ்.ஜெயம்.

**சாவகச்சேரி**

றே.றேகா, ரி.யசோதா, என்.கஜலஷ்மி, ரி. பஜிதா, ஜி.நாமகள், எஸ்.நர்மளா, பி.சபிதா, ஆர்.சிவதர்மினி, எஸ்.வதனா, என்.சத்தி யேந்திரா, வி.ஞானசௌந்தரி, எஸ்.புட்கலை, எஸ்.மயூரன், கே.துஷாஜினி, எஸ்.சுகிதா, எஸ்.நிர்மலதாஸ், எஸ்.புவிமகள், எஸ்.கன காங்கி, பி.சுமனா, எஸ்.மேரிஸ்ரெலா.

**பருத்தித்துறை**

பி.றாதிகாதேவி, ஆர்.பிறேமதாஸ், எஸ். தமிழினி, பி.கோபி, பி.சிவராஜினி, என். அதீபா, கே.தர்சினி, கே.மயூரி, ஆர்.அசிதா, என்.ஜனனி, என்.பிரியா, ஏ.லுதேஸ்மேரி, என்.தயாளினி, கே.யோதேசனா, ஏ.அந் தோனி யசிந்தன், பி.சத்தியா, ரி.தேவகி, கே.சரவணன், என்.கவிறோகா, ரி.தேவியா.

**உடுவில்**

எஸ்.கொலந்தன், வி.வித்தியாதரணி, பி. கலைவாணி, ஏ.நேதிகா, கே.கேதினி, என். தக்ஷாயினி, பி.லக்ஷனா, எம்.பிரபாலினி, எஸ்.தர்சாயினி, எஸ்.தனுஷன், எம்.சுகிர்தன், ஆர்.நதிகரன், வி.கஜீபன், ரி.கேதீஸ்வரன், வி. பார்த்தீபன். (முற்றும்) (203)

## காலனித்துவ கல்விச் சட்டத்துக்கு பதிலாக காலத்துக்கு ஏற்ற புதிய கல்விக்கொள்கை

### விரைவில் அறிமுகப்படுத்த அமைச்சு தீர்மானம்

கொழும்பு,ஜூலை14

தேசிய நலன்களை உத்தேசித்து புதிய தேசியக் கல்விக் கொள்கையொன்றை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.

1931ஆம் ஆண்டு அறிமுகமான கல்விச் சட்டத்தை அப்புறப்படுத்தும் நோக்கோடு நவகால உலகப் போக்கிற்கு ஏற்றாற்போல் இப்புதிய தேசியக் கல்வித் திட்டம் அமை யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற் கான புதிய தேசியக் கல்வி மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டுவருவதாகத் தெரிகின்றது.

இந்தப் பணியை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் நேற்றுமுன் தினம் பூர்வாங்கமாகக் கூடி ஆலோசனை நடத்தினர்.

தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும் மேற்படி குழுவின் தலைவருமான கலாநிதி ஜி.பி.குணவர்த்தன இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் தற் போதுள்ள சட்டம் குடியேற்ற காலத்தில் (கால னித்துவ) உருவாக்கப்பட்டது. காலத்துக்குப் பொருத்தமற்றது என்றார்.

மேற்குலக கல்வி முறைகளில் தங்கியி ராமல் தேசிய நலன்களையும் விழுமியங் களையும் உள்ளடக்கியதாய் புதிய கல்விச் சட்டம் அமையவேண்டும் என்று கூறிய கலாநிதி குணவர்த்தன, என்றாலும் அவசிய மாகும்போது வேறு மாதிரிகளிலிருந்து நல்ல அம்சங்களை ஏற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்தப் பழைய முறையை ஒழித்துக் கட்டு வதற்கு 59 ஆண்டுகளைக் கடத்திவிட்டோம் என்பது பெருங் குறைதான் என்றார் அவர். தேசிய கல்விக் கொள்கையொன்று இல் லாமையால் பதவிக்கு வந்த ஒவ்வோர் அர சும் வெவ்வேறு கல்விக்கொள்கைகளை செயற்படுத்தியுள்ளன.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து வருகின்றார். எனவே இப்பணி விரைவில் வெற்றிகரமாக முடிக்கப்பெறும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர் கள், அரசியல் கட்சிகள், சிவில் நிறுவனங் கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கருத் துக்களைக் கேட்டறிவதென்று குழு ஏற் கனவே முடிவு செய்துள்ளது.

ஊடகங்களில் இதுபற்றி வெகுவிரை வில் பரப்புரை செய்யப்படும் என்றும் கலா நிதி குணவர்த்தன தெரிவித்தார். (வ)

## அமைச்சரின் வங்கிக் கணக்கில் உள்ள கொடுக்கல் வாங்கல் ஆராயப்படுகிறது

### மாவிலாறு மோசடி வழக்கில் தகவல்

கொழும்பு,ஜூலை 14

தேசியக் கட்டமைப்புத் துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவின் வங்கிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் களை பரிசோதித்து வருவதாக புலனாய்வுப் பொலிஸார் கொழும்பு நீதிமன்ற நீதிவானி டம் தெரிவித்தனர்.

மாவிலாறு இழப்பீடு வழங்கலில் நிகழ்ந் துள்ள ஊழல்கள் தொடர்பாக அமைச்சர் தாமாக வழங்கியுள்ள வாக்கு மூலத்தையும் தாம் ஆய்வு செய்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

மாவிலாறு பொதுநிதி கையாடல் தொடர் பான வழக்கு, கொழும்பு பிரதம நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன முன்நிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

சந்தேக நபர்கள் எண்பத்தெட்டு லட்சத்து பதினெண்ணாயிரத்து எண்ணூற்றி எழுபத்து ஒன்பது (88, 18,879) ரூபா வைக் கையாடல் செய்திருப்பது புலனாய்வுகளில் தெரிய வந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதா கவும் அவர்கள் நீதிமன்றத்துக்குத் தெரியப் படுத்தினர்.

அமைச்சரின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் வாதிடுகையில், தமது கட் சிக்காரரின் கௌரவத்தை இழிவு படுத்து வதற்காக அரசியல் நோக்கத்தில் சதி நடை பெற்றிருப்பதாகத் தெரிவித்தனர்.

நீர்ப்பாசன சேவைகள் சபையைச் சேர்ந்த சமிந்த புஷ்பகுமார என்பவரின் சாட்சியத் தின் படி மாவிலாறு அணைக் கட்டுக் கதவு கள் மூடப்பட்டதால் விவ சாயம் உண்மையி லேயே பாதிக்கப்பட்டிருந்ததா என்பதை ஆரா யாமலே இழப்பீடு வழங்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

இச்சியன்குளம் மற்றும் பூநகர் விவசாயி கள் குறித்த காலத்தில் விவசாயத்தில் ஈடு படவில்லை என்பதால், அவர்களுக்கு இழப் பீடு வழங்கலாகாது என்ற நிலையியல் கட் டளை இருந்த போதிலும் அவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் எழுப்பப்பட்டபோது, ஐந்து மில்லியன் ரூபாவை அமைச்சர் தமது மனைவியின் பெய ரில் வைப்புச் செய்திருப்பதாகத் தெரிவிக் கப்பட்டதை அமைச்சர் மறுத்திருந்தார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அரச அதிகாரிகள் அனைவரும் தொடர்ந்து ஜூலை 25 வரை விளக்க மறியலில் வைக் கப்படுவர். (அ-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷின் பந்துகளுக்கு விளாசித் தள்ளினார் சங்ககார; தொடரை வென்றது இலங்கை

பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்டில் இன்னிங்ஸ் வெற்றி பெற்று அசத்திய இலங்கை அணி, இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இன்னிங்ஸ் மற்றும் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பங்களாதேஷ் அணிக்கு அணித் தலைவர் முகமது அஷ்ரபுல் சதம் அடித்து ஆறுதல் அளித்தார். இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றியது.


சங்ககார

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் இலங்கை வென்றது. இரண்டாவது டெஸ்ட் கொழும்பில் நடந்தது. முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 62, இலங்கை 451 ஓட்டங்களை எடுத்தன. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை விளையாடிய பங்களாதேஷ் அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 69 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் பொறுப்புடன் பேட் செய்த அஷ்ரபுல், டெஸ்ட் அரங்கில் தனது 4 ஆவது சதத்தைக் கடந்தார். மறுமுனையில் டெஸ்ட் அரங்கில் தனது முதல் அரைச் சதத்தைக் கடந்தார் முஷ்பகர். 9 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 80 ஓட்டங்கள் சேர்த்த முஷ்பகர், முரளிதரனின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார்.

ஓரளவு தாக்குப் பிடித்து ஆடி வந்த பங்களாதேஷ் அணியை இறுதியில் நிலைகுலையச் செய்தார் சமிந்த வாஸ். இவரது வேகத்தில் முகமது ஷரீப், மோர்டசா ஆகியோர் விரைவில் வெளியேறினார்கள். அத்துடன் ஹுசைனையும் ரன் - அவுட்டாக்கி அசத்தினார் வாஸ். இறுதியில் பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 299 ஓட்டங்கள் மட்டும் எடுத்துத் தோல்வி அடைந்தது. சிறப்பாக பந்து வீசிய வாஸ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த பங்களாதேஷ் அணித்தலைவர் அஷ்ரபுல் 129 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்னிங்ஸ், ஆட்டநாயகன் விருதை 200 ஓட்டங்கள் குவித்த இலங்கை அணியின் சங்ககார கைப்பற்றினார்.

முன்றாவது டெஸ்ட் போட்டியும் இப்போது ஆரம்பமாகியுள்ளது. அதிலும் இலங்கை அணியின் ஆதிக்கம் தொடர்கிறது.

### சங்ககார முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 200 ஓட்டங்கள் குவித்து அசத்திய இலங்கை அணியின் வீரர் சங்ககார 5ஆவது இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி 3 ஆவது இடத்தைக் கைப்பற்றினார். இப்போட்டியில் சதம் அடித்து ஆறுதல் அளித்த பங்களாதேஷ் அணித்தலைவர் அஷ்ரபுல் 60 ஆவது இடத்திலிருந்து 15 இடங்கள் முன்னேறி 45 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். முதல் மற்றும் இரண்டாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் ரிக்கிபொண்டிங்கும், பாகிஸ்தானின் முகமது யூசுப்பும் உள்ளனர். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் தென்னா பிரிக்காவின் நிற்னி உள்ளார்.


வாஸ்

### டோனி முன்னேற்றம்

ஒரு நாள் போட்டிக்கான புதிய தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டது. இதில் இந்திய விக்கெட் காப்பாளர் மகேந்திரசிங் டோனி ஓர் இடம் முன்னேறி 5 ஆவது இடத்தைப் பிடித்தார். மேற்கிந்தியத் தொடரில் மோசமாக விளையாடிய இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் தனது முதலிடத்தை ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்கிடம் பறிகொடுத்தார். மூன்றாவது இடத்தை ஆஸ்திரேலியாவின் மைக்ஹசி தக்கவைத்துக் கொண்டுள்ளார். இந்திய அணியின் முக்கிய வீரர்களான டிராவிட், யுவராஜ், சச்சின் ஆகியோர் முறையே 16 ஆம், 19 ஆம், 21 ஆம் இடங்களில் உள்ளனர்.


டோனி

### இந்தியப் பயிற்சியாளராக வெசல்ஸ்?

இந்திய அணிக்குப் பயிற்சி அளிக்கத் தயாராக இருப்பதாக முன்னாள் தென்னாபிரிக்க அணித் தலைவர் கெப்ளர் வெசல்ஸ் தெரிவித்துள்ளார். இந்திய அணியின் பயிற்சியாளர் பொறுப்பைக் கிரகம் போர்ட் ஏற்க மறுத்ததையடுத்து, இப் பதவி வெற்றிடமாக உள்ளது. இங்கிலாந் துத் தொடருக்குத் தற்காலிகமாக சந்து போர்டே முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தகுந்த பயிற்சியாளரைத் தேர்வு செய்யும் பணியில் இந்திய கிரிக்கெட் சபை ஈடுபட்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் ஜோன் டைசன், டெரி ஓலிவர் மற்றும் நியூசிலாந்தின் நாஸ்வொர்த்தி ஆகியோருக்கு இடையே போட்டி இருக்கும் எனத் தெரிகிறது. தற்போது நான்காவதாக இந்தப் போட்டியில் கெப்ளர் வெசல்ஸ் குதித்துள்ளார். தற்போது இவர் தென்னா பிரிக்க ஜுனியர் அணிக்குப் பயிற்சி அளித்து வருகிறார்.


வெசல்ஸ்

இவர் கூறுகையில், இந்திய அணிக்குப் பயிற்சி அளிக்க ஆர்வமாக உள்ளேன். எனது முகவர் லிகர்ட்வுட் இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைத் தொடர்புகொள்வார். அவரிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளேன் - என்றார். இது தொடர்பாக லிகர்ட்வுட் இந்திய அணியின் மூத்த வீரரைத் தொடர்புகொண்டுள்ளார். லிகர்ட்வுட் கூறுகையில், மூத்த வீரர்கள் சிலருடன் பேச்சு வார்த்தை நடத்தினேன். இதில் ஒருவர் வெசல்ஸ் பற்றி கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெசல்ஸிடம் விரைவில் சபை ஆலோசிக்கவுள்ளது - என்றார்.

'அத்லெட்ஸ் 1' என்ற நிறுவனத்தில் பணியாற்றும் லிகர்ட்வுட்டுடன் கும்ளே, அகார்கர், லட்சுமண், ஹர்பஜன் மற்றும் கங்குலி ஆகியோருக்குத் தொடர்புவுள்ளது. கங்குலிக்கு நார்த் ஆம்டன்ஷையரில் பங்கேற்க வாய்ப்புப் பெற்றுக் கொடுத்ததில் லிகர்ட்வுட்டுக்கும் பெரும் பங்கு உண்டு. மேலும் கங்குலி இந்த அணிக்காக ஆடிய காலங்களில், வெசல்ஸ் பயிற்சியாளராக இருந்தார். இந்நிலையில் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் எவருக்கும் இந்திய கிரிக்கெட் சபை எதிர்பார்த்த தகுதிகள் இல்லை. இதனால் நிர்வாகிகள் கவலையடைந்துள்ளனர்.

### கெய்ல் நம்பிக்கை

## இந்தியப் பயிற்சியாளராக வெசல்ஸ் விருப்பம்?

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிநடை தொடரும் என்கிறார் அணித்தலைவர் கிறிஸ் கெய்ல். இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி டெஸ்ட் தொடரை இழந்தது. 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் வெற்றியாளரை நிர்ணயிக்கும் முக்கியமான மூன்றாவது போட்டி கடந்த 10 ஆம் திகதி டிரண்ட் பரிட்ஜில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற் கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்களை எடுத்தது. மோர்டன் 82 ஓட்டங்களை எடுத்தார். அடுத்துத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 44.2 ஓவரில் 196 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து, 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரை 2-1 எனக் கைப்பற்றியது. இது குறித்து அணித் தலைவர் கெய்ல் அளித்த பேட்டி:

நான் தற்காலிக அணித்தலைவர் தான். சர்வான் மீண்டும் அணியில் இடம் பிடிக்கும்போது, அவர் அணித்தலைவராகச் செயல்படுவார். காயம் காரணமாக அவர் விலகியது துரதிருஷ்டவசமானது. இந்த வெற்றியினால் வீரர்கள் ஓய்வாக இருக்கமாட்டார்கள். அணியின் வெற்றி தொடரும். அயர்லாந்துக்கு எதிரான தொடரைக் கைப்பற்ற முழுமையாகப் பாடுபடுவோம் - இவ்வாறு கெய்ல் தெரிவித்தார்.

டிலான்

COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Off : 15, Sirambiyadi Lane, Jaffna
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna
T.P:- 021-222 8250,0777 222422
Diploma in Computerized Accounting...
Quick Book Premier + ACCPAC + MYOB
ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்
வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I :14/07/2007 Batch II :15/07/2007
Batch III :16/07/2007 Batch IV :21/07/2007
Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

இறைச்சிக்கோழி விற்பனை
புறொயிலர் உயிர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

புறொயிலர் உயிர்க் கோழி
புறொயிலர் உயிர் இறைச்சிக்கோழி, விறாத்துச் சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்).
NEW R.S.K. FARM
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

இறைச்சிக் கோழி விற்பனைக்கு
ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், விறாத்துக் குஞ்சுகள் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன்வீதி,கலட்டி, யாழ்ப்பாணம். (62521)

தேவை
யாழ்.நகரில் இயங்கும் பார்மசி, மெடிக்கிளினிக்கிற்கு பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை.
1. கணனி இயக்குநர் (Computer operator - பெண்)
2. கணக்காளர் (Accountant – பெண்)
3. ஆங்கில மருந்து வியாபாரம் பழக விரும்புபவர் (பெண்)
4. தாதிய உதவியாளர் (பெண்)
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.
நேர்முகத் தேர்வு :- காலம் 15-07-2007 (ஞாயிறு) காலை 10 மணி.
இடம்:- சன்றைஸ் மெடிக்கிளினிக், 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna Branch : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% Off

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~7,000~~ 1,400 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~9,000~~ 1,800 | Diploma in Web page Designing, 4 Months, ~~7,000~~ 1,400 |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~7,000~~ 1,400 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~6,000~~ 1,200 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~6,000~~ 1,200 |
| Diploma in Auto CAD, 3 Months, ~~6,000~~ 1,200 | Diploma in Microsoft Office, 3 Months, 750 | Accounting Package, 3 Months, ~~7,000~~ 1,400 |

50% Off ADVANCE COURSES
Diploma in Multimedia ~~5000~~ 2,500
Diploma in Video Editing ~~6000~~ 3000
வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 15/07/2007
Batch II : 18/07/2007
Batch III : 21/07/2007
Batch IV : 25/07/2007
கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் கரங்களில் 09 04 1929

சிவனின் பாதங்களில் 25 06 2006



அமரர்
# தம்பிராசா சிவசங்கரன்
(சங்கரன் அண்ணா)
திதி : அமாவாசை

[6 ஆம் வட்டாரம் புங்குடுதீவு மேற்கு, மணிகூட்டுவீதி, யாழ்ப்பாணம்]
[முன்னாள் சாறி எம்போறியம் ஊழியரும், முன்னாள் சின்னத்துரை அன் பிறதர்ஸ் காசாளரும்]

எம் நெஞ்சிருக்கும் வரை உங்களின் பசுமையான நினைவுகள் நீங்கா திருக்கும்
உங்களின் ஆத்மா சாந்தி அடையும் வரை எல்லாம் வல்ல புங்குடுதீவு பெரியபுலத்து விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (62618)

இல.451/4, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/இளவாலை
# புனித ஹென்றியரசர் கல்லூரியின்
# 100ஆவது ஆண்டு விழாச் சிறப்பிதழ் 1907 – 2007

## MESSAGE OF FELICITAION FROM THE BISHOP OF JAFFNA



On the happy occasion of the 100th Anniversary of St.Henry's College, Ilavalai rejoice with the Rector, Staff, Students and join in your prayers of thanksgiving to Almighty God, Our Heavenly Father for all the successes bestowed on the College during the past 100 years.

The College became an English school under the guidance of the illustrious and pioneering educationist in Jaffna, Rev.Fr.Charles Mathews. Later became as a premier Catholic English school under the guidance of famous brother of St.Joseph congregation.

When the SSJ Brothers left the College came under the leadership of illustrious Educationalists like Frs. M.A.Singarayer, Jeevaratnam, late Bishop B. Deogupillai and John Francis. The college shined not only in the academic field but also in the fields of Sports and Drama.

This College also had to face the ravages of the ethnic conflict, displacements etc. Nevertheless it has continued to survive and flourish under the able guidance of the late Fr. Anton Rajanayagam, Fr. Justin B Gnanapragasam and the Present Rector Fr.James Singarayer.

· The OBA of St. Henry's College in UK. France, Europe, and Canada have continued to show their loyalty to the College by contributing regularly to its needs and also have kept alive the memory of the College among the Alumni. We gratefully remember them at this occasion.

Once again I wish every success to the College in the coming years in serving the needs of the students of this District.

**Rt. Revd. Dr. Thomas Savundaranayagam**
Bishop of Jaffna.

## MESSAGE FROM THE VICE-CHANCELLOR UNIVERSITY OF JAFFNA



I am really glad in sending this message to the magazine which is being released to mark the centenary of St. Henry's College.

St. Henry's College is well rooted in the rich soil of Ilavalai as a big shady tree under the Rectorship of a catholic priest, here discipline is promoted among the pupils with great care.

Every child is educable. Today we live in a fast moving scientific world. Our children should keep pace with the progress of the scientific nations.

I admire the endeavours and concern of Henricians in enlightening the younger generation.

Good luck and best wishes, to Henricians.

**Prof. R.Kumaravadivel.**

## புகழ் பூத்த கல்லூரித் தாயே நின் புகழ் வாழ்க



கல்வி என்பது மறைந்து கிடக்கும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதோடு, அறிவுச் சுடரை ஏற்றி, ஏற்றம் பெற வைக்கும் ஏணியாக விளங்குவதுமாகும். மனிதனை, மனிதனாக வாழ வழி வகுப்பதும் கல்வியே. இத்தகைய கல்வியை வழங்கும் கற்பக விருட்சங்களாக விளங்குவன கல்லூரிகளே.

கல்லூரிகளின் கல்வியை வழங்கும் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள புகழ் வாய்ந்த கல்லூரிகளிலொன்றாகவும், இளவாலையில் அமைந்துள்ள புனித ஹென்றியரசர் கல்லூரி விளங்குவதை எண்ணிப் பெருமகிழ்வடைகின்றேன். கல்லூரி அன்னை தன் பணியில் நூறு ஆண்டுகளை நிறைவு செய்து பூரிப்படைவதும், இக்கல்லூரியின் மைந்தனாகவும், பழைய மாணவர் சங்கத் தலைவனாகவும் இருந்து அன்னைக்குச் சேவை செய்யும் பாக்கியம் பெற்றமையும் மிகுந்த மனமகிழ்வைத் தருகிறது. இன்று கல்லூரி அன்னைக்கு நூற்றாண்டு விழா. அவ்விழாவையொட்டி வெளிவரவிருக்கும் சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தியை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததே என்றெண்ணி இரட்டிப்பு மகிழ்வடைகிறேன்.

நூற்றாண்டு காலமாகப் பலருக்குப் பெருமை தேடிக்கொடுத்த, பலரை வாழ வைத்த, பலரை நெறிப்படுத்திய கல்லூரி அன்னை வாழ்க!

நூற்றாண்டு நிறைவு காணும் அன்னை இன்னும் பல நூற்றாண்டுகள் வாழ்க!

பேராசிரியர். க. பாலசுப்பிரமணியம
பழைய மாணவர் சங்கத் தலைவர், இளவாலை.

## நூற்றாண்டு அகவையினிலே.....



*"கடின உழைப்பு எதனையும் வெல்லும்" என்ற விருது வாக்கியத்தை உயிர்மூச்சாகக் கொண்ட இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, நிர்வாக நுட்பவல்லுநரான கத்தோலிக்க மதகுருவின் வழி நடத்துதலில்; அனுபவம் மிக்க ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையாலும் மாணவ மணிகளின் தன்னம்பிக்கையோடு கூடிய இடையறா முயற்சியாலும் வெற்றி கள் பல குவித்து; சாதனைகள் பல புரிந்து பெருமிதத்துடனும் பேருவகையுடனும் இன்று கல்லூரித்தாய் நூற்றாண்டு விழாக் காண்பதற்கு முதற்காரணியாக விளங்குவது ஹென்றியரசரின் பாதுகாவலே என்பது வெள்ளிடைமலை.*

*இன்றைய விழா நாயகியாம் எம் கல்லூரித் தாயின் கைகுலுக்கி நல்வாழ்த்துக் கூறிப்பேருவகை அமைவதோடு, புனித ஹென்றிய ரசர் கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகள் நுண்ணறிவையும்; நன்னடத்தையையும், எண்ணற்ற மாணவர்களுக்குச் செழிப்புற ஊட்டி; புகழுடனும் புதுமைப்பொலிவுடனும் திகழ வேண்டுமென புனித அன்னாரின் அருள் வேண்டி நிற்கின்றேன்.*

*அ.யோ.சவுந்தரநாயகம்*
*செயலாளர், பழைய மாணவர் சங்கம்.*

## அருளாசிச் செய்தி



இன்று நூற்றாண்டு விழாக் காணும் புனித ஹென்றியரசர் கல்லூரியானது பல துறைகளில் வளர்ச்சியடைந்து நூறு வருடங்களாக கல்விக்கு பணியாற்றி அனைத்து மக்களினதும் நன் மதிப்பைப் பெற்றது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

மனித வாழ்வை மேன்மையடையச் செய்வது கல்வி. இதனை நமக்கு பெற்றுத் தருவது பாடசாலைகளாகும். இந்த வரிசையில் இப்பாடசாலை தனக்கோர் இடத்தைப் பிடித்துக்கொண்டு வள்ளுவரின் வாக்குக்கு அமைய

*"கண்ணுடையார் என்போர் கற்றோர்..."*
*என்ற மேன்நிலையை உருவாக்கியுள்ளது.*

இந் நிலையை உணர்ந்து எல்லோருக்கும் கல்வி என்ற வகையில் பாடசாலைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்விப் பணிக்காக சேவையாற்றிய அனைவரையும் வாழ்த்துகின்றோம். நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் அனைத்து உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

என்றும் வேண்டும் இறை அன்பு.
இரண்டாவது குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

## MESSAGE FROM THE BISHOP OF JAFFNA (CSI)



It gives me great joy to send you greetings from the Jaffna Diocese of the Church of south India as you celebrate one hundredth year of founding of the great educational institution St. Henry's College.

We wholeheartedly share your pride and sentiments on this memorable occasion. St. Henry's will always be known as an institution with great history of leadership, services and accomplishment. It has earned an unique and enviable place in the minds of our people. We are confident that the college will continue to play a significant role as its sets its foot into a new era always remembering the dedicated services provided by the leader- ship in the past and how that was instrumental in producing a large number of scholars.

May God almighty grant you wisdom and courage as you plan for the years to come.

**Rt. Rev. Dr. Daniel S.Thiagarajah Ph.D**
Bishop of Jaffna, Jaffna Diocese, Church of south India.

இன்று (14.07.2007) ஆண்டு விழா




## புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆசிரியர் கழகத் தலைவரின் உள்ளத்திலிருந்து...



நூற்றாண்டு அகவையின் நிறைவினிலே பலநூறு ஆசிரியர்களின் அளப்பரிய சேவையினால் கல்லூரியானது அகிலமெங்கும் புகழ்பரப்பி நிற்பது சிறப்பிற்குரியதாகும். அருட்சகோதரர்கள், குருக்கள், அருட்கன்னியர்கள், சாதாரண நிலையிலுள்ளோர் எனப்பலதரப்பட்டவர்கள் எமது கல்லூரியின் ஆசான்களாகத் திகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். ஆரம்பகாலம் முதல் இந்த ஆசான்கள், மாணவரின் அறிவுத் திறனுக்கு மட்டுமல்லாது, அறநெறி வாழ்வுக்கும் உறுதுணையாக விளங்கினர். அவர் கள் மிகத்திறமை வாய்ந்தவர்களாகவும், அர்ப்பணிப்பு நிறைந்தவர்களா கவும் இன்று வரை மரபுத்தொடராகச் செயலாற்றுவது பெருமைக்குரிய விட யமாகும். ஆசிரியர்கள், மாணவர்களிடம் மறைந்து கிடக்கின்ற திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி, மெருகூட்டி பிரகாசிக்கச் செய்வதற்கு, அன்று தொடக்கம் இன்று வரை பரம்பரம்பரை யாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிபர் - ஆசிரியர் நல்லுறவே காரணமெனலாம்.

ஆசிரியர் கழகமானது கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் அதிக அக்கறையுடன் "கடின உழைப்பால் எதனையும் வெல்லலாம்" என்னும் கல்லூரியின் விருது வாக்கிற்கேற்ப செயலாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும். இனிவரும் காலங்களிலும் கல்லூரித் தாயிற்கு பணியாற்ற பொறுப்பு, ஆற்றல், திறமை வாய்ந்த ஆசிரியர்கள் இணைந்து செயலாற்ற வேண்டுமெனவும், அதனால் நல்லதோர் எதிர்காலச் சமூகத்தை உருவாக்கிடவும், கல்லூரியின் புகழை எங்கும் பறைசாற்றவும், ஹென்றியரசர் கல்லூரியின் தனித்தன்மை வாய்ந்த மரபை என்றும் பேணுவோராகத் திகழவும் பாதுகாவலரின் பரிந்துரை என்றும் கிடைத்திடவும் வரம் வேண்டி வாழ்த்துகின்றோம்.

இ.குமரன
தலைவர், ஆசிரியர் சமூகம்.

## MESSAGE FROM THE FORMER RECTOR AND PRESENT VICAR GENERAL OF JAFFNA DIOCESE



It is with great joy and pride that I send my message to the Centenary Souvenir of St.Henry's College, Ilavalai. Chalking a hundred years in the service of educating the youths of Valikamam is, indeed, a great and noble thing and needs to be praised. Our greatful thanks goes to all those Co - operated in many different ways in the on going journey of St.Hentry's College.

My association with St. Hentry's College has been well over 25 years and in serving her and her students I have had enriching experiences. In moulding students, I too had been moulded well to serve the people in that area. The financial support and encouragement that I received from the Old Boys living in Sri Lanka and abroad have been immense and, to all of them, I am ever grateful.

I take this oppotunity to wish all the Henricians the loving protection of St.Hentry. May this Institution and all those associated with it continue the excellent work of educating the children to be responsible citizens of our country. May you go forward always to give glory to God.

**Revd. Dr.Justin B.Gnanapragasam**
Rector- St.Patrick's College,Jaffna.
Vicar General- Jaffna Diocese

## வலயக் கல்விப்பணிப்பாளர் வாழ்த்துகிறார்



அறிவையும் ஆற்றலையும் வளப்படுத்தக்கூடிய கலைகள் யாவற்றையும் வழங்கித் தம் மகத்தான சேவையினால் முத்திரையைப் பதித்துக்கொண்ட போற்றப்படக்கூடிய பெருமை வாய்ந்தது புனித ஹென்றியரசர் கல்லூரியாகும் இக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவின் சின்னமாக வெளிவரும் நூற்றாண்டு விழா சிறப்பிதழுக்கு ஆசிச் செய்தியை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்த மையை எண்ணிப் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் இடப்பெயர்வுகள், இடர்கள், இன்னல்கள் எனபவற்றைச் சந்திக்க நேர்ந்தாலும், இக் கல்லூரி, கல்வியிலும், ஒழுக்கத்திலும், கலையிலும், விளையாட்டுத் துறையிலும் சோதனைகள் மத்தியில் சாதனைகளை நிலை நாட்டி வருகின்றமை இறைவன் ஆசியினால் கிடைத்த நற்பேறென எண்ணி இறைவனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

ப. விக்னேஸ்வரன
வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.

## MESSAGE FROM REV. FR. J. A. JESUTHAS



It is with feelings of great joy, pride and gratitude that I send my greetings and congratulations to the Henrician Family on the occasion of the centenary celebrations.

The college has been a seat of wisdom mainly for the people of Ilavalai Deanery and especially the marginalized. The contribution of the college is very evident from the achievements of the present and the past pupils. Wherever I meet the Henricians, I feel proud and they too feel proud about their "Alma mater" and are thankful for the guidance they received.

The Antonian family at Kayts joins me in sending its prayerful wishes and greetings to the Henricians on the joyful remembrance of the centenary celebration.

I wish and pray that the blessings of God the Almighty be upon the college. May it prosper in all its endeavors.

**REV. FR. J. A. JESUTHAS**
Rector, St. Antony's College, Kayts.

## கல்லூரி அதிபரின் வாழ்த்து



கல்விப்புலத்திலே களம்பல கண்டும், கல்விமான்கள் பலரை உருவாக்கியும் களிப்படைந்து நிற்கும் புனித ஹென்றியரசர் கல்லூரி அகவை நூறுகளை நிறைவு செய்து ஆனந்தம் அடைகிறது. நாமும் மகிழ்வடைகின்றோம். கல்லூரி அன்னைக்கு விழாக்வெடுக்கும் இந்நந்நாளில் கல்லூரிக் குடும்பத்தினர், பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம் கல்லூரியின் அளப்பரிய சேவைகளை அளவிட்டுவிட முடியாது. கடந்த நூறு ஆண்டுகளாக கல்வியோடு மறைஞான உடல் ஆன்மீக ஆளுமை உருவாக்கத்தில் தன்னை அர்ப்பணித்து பல ஆயிரம் நற்பிரசைகளை உருவாக்கியுள்ள இக்கல்லூரி இனிவரும் காலத்திலும் மென்மேலும் தன்பணியை முன் னெடுக்க இறைவனின் நிறையாசி கிடைக்க இறையருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

அருட்திரு.கே.ஜேம்ஸ் சிங்கராஜர்.

## உளமார வாழ்த்துகின்றோம்



இயற்கை வளம் நிறைந்த பழம்பெரும் பதியாம இளவாலையின் கண் அதன் இயக்கசக்தியாக விளங்குகின்ற பாடசாலைகளில் ஒன்றான யா/புனித ஹென்றியரசர் கல்லூரி தனது நூறாவது அகவை நிறைவைக் கொண்டாடுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

கத்தோலிக்க பாடசாலைகளில் ஆண்களுக் கான தனிப்பெரும் பாடசாலை என்ற பெயரை நூறாண்டுகளாகத் தக்கவைத்து உலகளாவிய ரீதியில் சாதனைகளைப் புரிந்துவரும் யா/புனித ஹென்றியரசர் கல்லூரியின் புகழ் யாவரும் அறிந்ததே.

இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா நிறைவின் மகிழ்வில் திளைத்திருக்கின்ற யா/புனித ஹென்றியரசர் கல்லூரி சமூகத்தினர் அனைவருக்கும் எம் உளம்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை
அதிபர், யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.


## கல்லூரி மென்மேலும் சிறப்புற வாழ்த்துபவர்கள்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுந்தர்சன் பிரதான வீதி, மானிப்பாய். 021-222 2751 | ஆனந்தன் கட்டட ஒப்பந்தகாரர் இளவாலை. | கஜன் போட்டோ அன் வீடியோ நிகரை வைரவர் வீதி, சங்கானை. 0779122978 | Bio Tec Orient (PVT) Ltd 131/2, Palaly Road,Thirunelvely, Jaffna. 021-4590907 | லில்லி பான்சி பலஸ் கல்லூரி வீதி, இளவாலை. | லூக் வைத்தியசாலை பிரதான வீதி, இளவாலை. |
| திருப்பதி மானிப்பாய். | பொன்னரசி நகையகம் 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7648 | சொலிற் பம் பொந்தி லேன், பண்டத்தரிப்பு. ஏகவிநியோகத்தர்: 'சுந்தர்சன்', மானிப்பாய். | Pearl New Fashion House Main Street, Chankanai. | பிள்ளையார் பேக்கவுஸ், சுன்னாகம். | பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்பு. |
| நிரோ பேக்கவுஸ் கல்லூரி வீதி, இளவாலை. | புவி போட்டோ பிரதான வீதி, இளவாலை. | ACX Courier & Celluar Centre N0.6, New Market, Jaffna. (upstair) 021 222 6151, 0777519440 | FLASH - Net Communication, Netcafe & game Centre Nikarai Vairavar Road, Chankanai. | ஸ்ரார் கல்வி நிலையம் ஸ்ரேசன் றோட், சுன்னாகம். | சிவராதா புடவை மாளிகை 16B, பெரியகடை, யாழ்ப்பாணம். 021-222 2786 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளிலிருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தைப் பெற்று மாபெரும் பரிசுகளை வெல்லுங்கள்



## வெஸ்டர்ன் யூனியன் யாழ்குடா முகவர்கள்

| முகவர் | விலாசம் | நகரம் | தொ.பே. |
|---|---|---|---|
| 1. மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் | 212, ஸ்ரான்லி வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 2024 |
| 2. ராஜன் வி.சி.டி. | கடற்கரை வீதி, குருநகர். | யாழ்ப்பாணம் | 021 222 6854 |
| 3. ராஜு ஸ்ரோர்ஸ் | 67,69, கஸ்தூரியார் வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 5224 |
| 4. ஸ்ரீ முருகன்ஸ் | சிவன் கோயில் வீதி, காரைநகர். | யாழ்ப்பாணம் | 021 222 2670 |
| 5.திருமுருகன் கொம் நெட் | 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | யாழ்ப்பாணம் | 021 222 7310 |
| 6.யோகா கொமினிகேஷன் | 315, பலாலி வீதி, திருநெல்வேலி. | யாழ்ப்பாணம் | 021 222 2106 |
| 7.குமார் முகவர் தபால் நிலையம் | 133/3, மின்சார நிலைய வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 3453 |
| 8.ஸ்ரீமுருகன் முகவர் தபால் நிலையம் | 303, கே.கே.எஸ் வீதி. | யாழ்ப்பாணம் | 021 222 5392 |
| 9.கணேஷா | 329 பி,பிரதான வீதி. | பருத்தித்துறை | 021 226 3928 |
| 10.V.M.K. ஜுவலர்ஸ் | 15, கண்டி வீதி. | சாவகச்சேரி | 071 232 4412 |
| 11.ஸ்ரீகிருஸ்ணா கொம்யுனிகேஷன் | தொல்புரம்! | சுழிபுரம் | 021 222 6268 |
| 12.நீதினி முகவர் தபால் நிலையம் | பஸ்நிலையம். | சுன்னாகம் | 021 222 6267 |
| 13.கணேசன் சென்டர் | கே.கே.எஸ். வீதி. | இணுவில் | 021 222 5708 |
| 14.வசந்தா முகவர் தபால்நிலையம் | கண்டி வீதி. | கைதடி | 021 222 3850 |
| 15.அஸ்வினி மல்ரி பிளாசா | பலாலி வீதி. | கோண்டாவில் | 021 222 5115 |
| 16.தினேஷ் பேக்கவுஸ் | யாழ் .வீதி. | மானிப்பாய் | 021 222 2570 |
| 17.சரண்யா கொம்யுனிகேஷன் | சங்கானை சந்தை. | சங்கானை | 021 459 1220 |
| 18.ஓம் சரவணபவ கொம்யுனிகேஷன் | பொலிகண்டி: | வல்வெட்டித்துறை | 060 221 2616 |
| 19.நியூ அம்பிகா கொம்யுனிகேஷன் | பிரதான வீதி. | நெல்லியடி | 021 226 4197 |
| 20.சந்தியா மல்ரி கோட்யாட் | 531, பருத்தித்துறை வீதி. | நல்லூர் | 021 222 6960 |

MMBL MONEY TRANSFER

WESTERN UNION மணி டிரான்ஸ்பர்

(சி/52903)

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்....

அமரர்

# சின்னத்தம்பி செல்லையா



அன்னையின் மடியில் 10 . 08 . 1915

ஆண்டவன் அழைப்பில் 04.07.1997

**திதி: 14.07.2007**

நிஜவுலகில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த பெருவிருட்சம் நீங்கள் இன்றில்லையே...!
நீரற்றதாவரமாய் தவிக்கின்றோம் பிரிவதனால்,
பாசத்தின் பிறப்பிடமே! நேசத்தின் உறைவிடமே!!
தேசத்தின் மூலைகளில் தவழ்ந்துநாம் வாழ்ந்தாலும்
ஒருமுச்சு உம்குரலால் உளம்நிறைய வாழ்கின்றோம்.
புன்னகையொடு உம்மோடு பிரியாது வாழ்ந்தோம்;
கண்ணீரொடு உம் நினைவுகளைச் சுமக்கின்றோம்
மீண்டும் நீங்கள் எம்மொடு வருவீரென்றோ!!!

மடத்தடி வீதி,
கண்டி றோட், கொடிகாமம்.

தங்களின் பிரிவால் தவிக்கும்:
குடும்பத்தினர்.

(68643)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சமரசத்தைக் கைவிட்டு சம்ஹாரத்தை நாடுவோர்

'பேச்சென்ற பேச்சு, பேச்சோடு போச்சு' என்றாகிவிட்டது.

தொப்பிகலவைக் கைப்பற்றி, முழுக் கிழக்கு மாகாணத்தையும் மீட்டு, வெற்றியின் உச்சிக்கட்டத்தில் நிற்கும் அரசுக்கு தற்போது புலிகளுடன் அமைதிப் பேச்சில் ஈடுபடுவதற்கு ஆர்வம் இல்லை என்பதை வீறாப்பாகக் கோடி காட்டியிருக்கின்றார் அரசுப் பேச்சாளர் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா.

மறுபுறத்தில் -

போர்த் தீவிரத்தில் வெறிகொண்டு, யுத்த முனைப்புடன் செயற்படும் மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அரசுடன் அமைதிப் பேச்சு சாத்தியப்படாது, சமாதான முயற்சிகளுக்கும் வாய்ப்பு இல்லை என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன்.

வெற்றி மமதையை அரசியல் லாபமாக்கும் நோக்குடன் அரசுத் தரப்பில் அமைச்சர்கள் சிலர் 'நிபந்தனையற்ற பேச்சு' என்ற கயிற்றை அவிழ்த்து விட்டாலும் -

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அமைதிப் பேச்சு மூலமான தீர்வோ, சமாதான முயற்சிகள் ஊடான இணக்கமோ இப்போதைக்குச் சாத்தியப்படவே போவதில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சர் யாப்பா, தமிழ்ச்செல்வன் ஆகிய இருவரினதும் கருத்துகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இராணுவ ரீதியில் வெற்றிமேல் வெற்றி குவிந்து வருகின்றது. இந்தச் சமயத்தில் ஏன் சமரசம்? ஒரேயடியாகத் தமிழர் தரப்பை சம்ஹாரம் செய்துவிட்டு மறு வேலையைப் பார்க்கலாமே என்ற சிந்தனையே தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தின் மத்தியில் மேலோங்கி நிற்கின்றது. அதைத்தான் அரசுப் பேச்சாளரான ஊடக அமைச்சரின் வீறாப்புப் பேச்சு பிரதிபலித்து நிற்கின்றது.

அரசின் நிலைப்பாடு அமைதி வழித் தீர்வல்ல, போர் வெறி அடக்குமுறையே என்பதை இப்பத்தியில் பல தடவைகள் துல்லியமாகத் தெரிவித்து வந்திருக்கின்றோம்.

"பயங்கரவாதிகளான புலிகளை கிழக்கிலிருந்து விரட்டியடித்தமைபோல வடக்கிலிருந்தும் விரட்டியடிக்க அரசு திடசங்கற்பம் பூண்டிருக்கின்றது." - என்று அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பிரகடனம் செய்தமையும் அந்தப் பின்னணியில் அமைந்ததுதான்.

அந்த நோக்கையும் போக்கையும் மீள ஒரு தடவை உறுதிப்படுத்தியிருக்கின்றார் ஊடக அமைச்சர் பிரியதர்சன யாப்பா. அவ்வளவே.

ஆனால், தற்போதைய இராணுவ நடவடிக்கைகளும், போர்வெறிப் போக்கும் அமைதி முயற்சிகள் என்ற தடத்துக்கு மீள முடியாத - ஒரு வழிப்பாதை திசையில் - இந்தத் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தை இழுத்துச் செல்கின்றன என்பதே யதார்த்தமாகும்.

இந்த இடைக்கால வெற்றிகளை எண்ணி தென்னிலங்கை துள்ளிக்குதிக்கின்றது. இந்த அத்திவாரத்தில் வெற்றிக்கோட்டை என்ற நிரந்தர ஜெய மாளிகையை அமைத்து விடலாம் என அது கனவு காண்கின்றது. அதனால் அமைதித் தீர்வுக்கான கடைசி வாய்ப்புகளையும் அது உதாசீனம் செய்து - உதறித்தள்ளி - வீறாப்புப் பேசுகின்றது.

தென்னிலங்கையின் இத்தகைய போக்குப் புதியதல்ல. இவ்விவகாரத்தில் முன்னைய தென்னிலங்கைத் தலைமைகளும் இதே போக்கில் செயற்பட்டுத்தான் வாங்கிக் கட்டிக் கொண்டன என்பதும் நமக்குத் தெரிந்ததே.

1994 மத்தியில் பிரதமராகி, 1994 இறுதியில் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவும் 1995 நடுப்பகுதியிலிருந்து இதே போக்கைத்தான் பின்பற்றினார்.

இப்போது மஹிந்தரின் அரசு தொப்பிகல உட்பட்ட கிழக்குப் பிரதேசத்தைக் கைப்பற்றியதும், அமைதி முயற்சிகளை நிரந்தரமாக உதறித்தள்ளி, கொக்கரிப்பது போலவே, அச்சமயம் யாழ். குடாநாட்டை மீட்டு,'ஜெயசிகுறு' நடவடிக்கையை வீராவேசத்தோடு முன்னெடுத்து சந்திரிகா அரசும் மார்தட்டியது.

ஆனால் கடைசியாக என்ன நடந்தது? பொறுத்தவர்கள் பொங்கிய போது நிலைமை மாறித் தலைகீழானது.

அமைதி வழித் தீர்வே சாத்தியப்படக்கூடியது என்பதைக் காலம் கடந்த ஞானமாக சந்திரிகா அரசு உணர்ந்த சமயத்தில்தான், அந்த வாய்ப்பையும் தமது போர்வெறித் தீவிரத்தால் தான் கோட்டை விட்டு விட்டமையை அந்த அரசு புரிந்துகொள்ளும் துர்ப்பாக்கியம் அதற்கு ஏற்பட்டது.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை பேச்சு மூலம் - சமாதான நடவடிக்கைகள் வாயிலாக - தீர்ப்பதற்குத் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை 1995 முற்பகுதியில் தான் பின்பற்றிய போர்வெறித் தீவிரத்தினால் கோட்டை விட்ட சந்திரிகாவின் தலைமை, பத்து ஆண்டுகள் கழித்து 2005 நவம்பரில் ஆட்சியை விட்டுத் தான் அகலும் வரை - அந்த வாய்ப்பை மீளப் பெற்றுப் பயன்படுத்தத் துடித்தும் கூட - அந்த வாய்ப்புக் கடைசிவரை அத்தலைமைக்குப் பிறகு கிட்டாமலேயே போய்விட்டது.

அதேபோலவே, மஹிந்தரின் தற்போதைய அரசும் ஆரம்ப இராணுவ வெற்றிகள் தந்த அரசியல் போதை காரணமாக மென்மேலும் போர்வெறித் தீவிரத்துக்குள் மூழ்குகின்றது.

இந்த இராணுவ வெ(ற்)றிப் போதை கலைந்து, உண்மையும் யதார்த்தமும் தெளியும்போது - தெரியும்போது - அருமையான வாய்ப்பைக் கோட்டை விட்ட கேடும் புரியத் தொடங்கும்.

அச்சமயத்தில் அமைதி முயற்சிகளுக்குத் துடிப்பது, குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் எத்தனமாகவே இருக்கும்.

அதைத் தென்னிலங்கை பட்டறியும்வரை பார்த்திருப்பதே இன்று தமிழர் தரப்பு செய்யக்கூடியது.

# தும்பளையில் வியாழன் மாலை கிளைமோர்த் தாக்குதல் அதில் சிக்கி பாடசாலை அதிபர் பலி; படை அதிகாரி காயம்!

உடுப்பிட்டி, ஜூலை 14

பருத்தித்துறை, தும்பளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் பாடசாலை அதிபர் ஒருவர் உயிரிழந்தார். இராணுவ உயர் அதிகாரி ஒருவர் காயமுற்றார்.

பருத்தித்துறை - தும்பளை வீதியில் வந்த படையினரின் வாகனத்தை இலக்குவைத்து கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறியப்படுகிறது.

இத்தாக்குதலில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் காயமடைந்தார் என்று படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலின் போது, கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் மணியம் கணபதிப்பிள்ளை (வயது 57) என்பவர் மார்பில் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை பருத்தித்துறை நீதிவான் க. அரியநாயகம் சம்பவ இடத்தில் நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1-155)

## கரித்தாஸ் - கியூடெக் கண்காட்சி நேற்று ஆரம்பம்; இன்றும் இடம்பெறும்

நல்லூர், ஜூலை 14

கியூடெக் கரித்தாஸ் பெண்கள் அமைப்புகள் ஒன்றியத்தின் 3ஆவது ஆண்டு விழாவை ஒட்டிய 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்' என்னும் தொனிப் பொருளிலான கண்காட்சியும் விற்பனையும் கியூடெக் வளாகத்தில் நேற்று ஆரம்பமாகின.

ஒன்றியத்தின் தலைவி திருமதி ரஞ்சினி அருள்நேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு கண்காட்சியைச் சம்பிரதாயபூர்மாக ஆரம்பித்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே. கணேஸ், கரித்தாஸ் கியூடெக் நிறுவன (கொழும்பு) தேசிய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் திருமதி தைவினி பொன்சேகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வைத்து ஒன்றியத்தின் கிளைகளுக்கான சேமிப்புப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

சிறுகைத் தொழில், மீன்பிடி உபகரணங்கள், நவீனரக ஆடைகள், உணவு வகைகள், சவர்க்காரத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சி இன்றும் நடைபெறும். (அ-202-111)

## மின்சாரசபை போட்டிப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கை மின்சார சபையின் வட மாகாண அலுவலகங்களில் நிலவும் எழுதுநர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென நாளை நடைபெறவிருந்த எழுத்துப் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாகப் பணியகத்தால் இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் அலுவலகத்தில் நடத்தப்படவிருந்த இந்தப் பரீட்சையே தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாகாண பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.



கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் பெண்கள் அமைப்புக்களின் 3ஆவது ஆண்டு விழாவையொட்டிய விற்பனையும் கண்காட்சியும் நிகழ்வை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைப்பதையும் கொழும்பு கரித்தாஸ் தேசிய இணைப்பாளர் திருமதி தைவினி பொன்சேகா மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)

## 55 வயதுக்கு மேற்பட்டோர் கிராம சேவையாளரின் சிபார்சுடன் வெளிமாவட்டத்துக்குச் செல்லலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

குடாநாட்டிலுள்ள 55 வயதுக்கு மேற்பட்டோர் கிராம சேவையாளரால் வழங்கப்படும் சிபார்சுக் கடிதத்துடன் வெளிமாவட்டங்களுக்குப் பயணஞ் செய்ய முடியும்.

கடந்த இரண்டு வார காலமாக இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்வோர் அனைவரும் பாதுகாப்பு அனுமதி பெற்றே செல்ல வேண்டிய நிலை முன்னர் இருந்தது.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள் பாதுகாப்பு அனுமதியைப் பெறாமல் கிராம சேவகரின் சிபார்சுக் கடிதத்துடன் வெளிமாவட்டங்களுக்குப் பயணஞ்செய்ய முடியும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. ஆயினும் அந்த நடைமுறை தற்போது 55 வயதாகக் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் கிராம சேவையாளரால் வழங்கப்படும் சிபார்சுக் கடிதத்துடன் விமானச் சீட்டைபெற்று அல்லது கப்பலுக்குப் பதிவு செய்து வெளிமாவட்டங்களுக்குச் செல்ல முடியும். இவர்கள் பாதுகாப்பு அனுமதியைப்பெற வேண்டிய தேவை இல்லை - என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-50)

## மாட்டின் வீதியில் இளைஞன் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுக்காலை 9 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நாவலர் வீதி, அரியாலையைச் சேர்ந்த விஜேந்திரன் வரதராஜா (வயது 19) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இந்த இளைஞர் வீதியில் வந்துகொண்டிருந்த போது அவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாதோர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து பதில் நீதிவான் திருமதி லிங்கா துரைராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-50-203-78)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 31 | ஞாயிற்றுக்கிழமை 15.07.2007 |
| திதி : பிரதமை | மாலை 05.54 |
| நட்சத்திரம் : பூசம் | பின்னிரவு 05.15 |
| சுபநேரம் | : 09.00 - 10.30 |
| ராகுகாலம் | : 04.30 - 06.00 |

## கோப்பாயில் திருட முயன்றவர் பிடிபட்டார்

கோப்பாய் மத்தியில் வீடு ஒன்றில் திருட முயன்ற ஒருவர், பொது மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்டவரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அந்தப் பகுதியில் உள்ள பல வீடுகளில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இவர் குறிப்பிட்ட வீடு ஒன்றில் திருட முயன்ற போது மக்கள் சேர்ந்து இவரைப் பிடித்தனர் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். (அ-1-202)

## இன்றும் நாளையும்

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம், யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணியினருக்கு நடத்தும் வலைபந்தாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (1-203)

* * *

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளை கென்றிடுனான்ற் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் குடாநாட்டில் இயங்கும் சங்கக்கிளைகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.(1-202)

* * *

கலாபூசணம் விருதுபெற்ற சிற்ப சிகாமணி சீ. செந்தூர்ராஜாவைப் பாராட்டும்விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் பொ. காங்கேயநாதன் தலைமையில் இடம்பெறும். (1-203)

* * *

வலி. மேற்கு சிறிய நடுத்தரக் கைத்தொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஐக்கிய நலன்புரிச் சங்கத்தில் தலைவர் செ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் உரும்பிராய் கிளையின் 2007 - 2008ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபையின் பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகங்களின் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ். தங்கராஜாவும் கௌரவ விருந்தினராக பிராந்திய தலைவர் லயன் சிவபாலசுப்பிரமணியமும் கலந்துகொள்வர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கையின்போது அதிகாரி களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் படை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இராணுவத் தளபதி படைச் சிப்பாய்களையும் சந்தித்து உரையாடினார். அவர்களுக்குப் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்தார்.

தொப்பிகலவில் கைப்பற்றப்பட்ட சில இடங்களை யும் பார்வையிட்ட இராணுவத்தளபதி உள்ளிட்ட குழு வினர் நேற்றே கொழும்பு திரும்பினர். (சி)

## பாக். அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்புக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். வடமாகாண மஜ்லிஸிஸ் உலமா சபை இதனை ஏற்பாடு செய்திருந்தது. சபையின் தலைவர் மௌலவி எஸ். எச். முபாரக், வட மேல் மாகாண சபையின் உறுப்பினர் எஸ். எச். எம். நியாஸ் ஆகியோர் ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்தனர். ஈற்றில் ஜனாதிபதி முஷாரப்பின் கொடும்பாவி இழுத்துச் செல்லப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. (சி)



## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கைதடி ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளருமாகிய சோமசுந்தரம் சிறீதரன் அவர்கள் 12.07.2007 இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன், அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

தலைவர், பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.

15ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் யாழ்.மாவட்ட மாஸ்ரர் பேக்கரிச் சங்கத்தினருக்கு எமது நல்வாழ்த்துக்கள்

Meezan

61 1/1, Stace Road, Grandpass, Colombo 14. Tel:2431577-8, Fax: 2431578
ibrahimashraff@yahoo.com, Mobile: 077 3205405
Sole Agents For DUAL Yeast With Improver From Belgium

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகுருநாதன் ரோகினியம்மா

பொன்னாலையைச் சேர்ந்த சிவகுருநாதன் ரோகினியம்மா நேற்றுக் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.பொ.சி. வரதராஜா
(ஓய்வுபெற்ற நீதிபதி, மேல் நீதிமன்றம்).

### சோமசுந்தரம் ஸ்ரீதரன்

**(முன்னாள் பொது முகாமையாளர்- சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கைதடி ப.நோ.கூ.சங்கம்)**



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஸ்ரீதரன் 12.07.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சுதந்திரதேவியின் அன்புக் கணவரும் செந்தூரன், சுபத்திரன், பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி வசந்தா சண்முகராசா, மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நடராசா இரவிராஜ் அவர்களின் அன்புச் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*சாவகச்சேரி,*
*021 222 3395.*

தகவல்:
குடும்பத்தினர்.

### மணியம் கணபதிப்பிள்ளை

**(அதிபர், யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)**

நெல்லண்டை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மணியம் கணபதிப்பிள்ளை 12.07.2007 வியாழக்கிழமை அகாலமரணமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மணியம்-தையல்நாயகி தம்பதியினரின் அருமைப்புதல்வரும், தனலட்சுமியின் (ஆசிரியை, யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர்வித்தியாலயம்) அன்புக் கணவரும் திருமதி செ. மதிவதனி (ஆசிரியை, யா/ கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை), மதிவாணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ. செல்வக்குமாரின் (ஆசிரியர், யா/ வேலணை மத்திய கல்லூரி) அன்பு மாமனும் விகாசன், விதுஷா ஆகியோரின் பேரனும், தெட்சணாமூர்த்தி - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் இ. பாலசரஸ்வதி, சி. பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருமதி சி. ஜெயலட்சுமி, தெ. கந்தவேள், இ.சிவபுண்ணியம் ஆகியோரின் மைத்துனரும் சிவதர்ஷா, பிரணவன் ஆகியோரின் பெரிய தந்தையும் க. சிவநேசனின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சாந்தி",*
*நெல்லண்டை, தும்பளை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
இ. சிவபுண்ணியம் (J.P)
மைத்துனர்.

## விடுதலைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார இலக்குகளை தாங்கள் தாக்கப் போவதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று முன்தினம் ரொய்ட் டருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார். (அ-1)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரவேசித்து தேடுதல் என்ற சட்டத்தைத் தமது கையில் எடுத்துக் கொண்டுள்ளனர் படை யினர் என்பது தெட்டத் தெளிவாகின்றது.

இந்த நடவடிக்கையில் இரு குழந்தைகளின் தந்தையான இளைஞர் ஒருவரின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் விதிக் கட்டுப்பாட்டுக்கும், கொள்கை உறுதிக்கும் விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது- என்றுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது. (சி)

## மூன்று மாதத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

அங்கு எதுவித அச்சுறுத்தல்களுமின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

கிழக்கில் இடம்பெறும் மீள்குடியேற்றங்களில் எதுவித முறைகேடுகளும் இடம்பெறமாட்டாது. அங்கு வாழ்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களே அவர்களின் விருப்பத்தின் பேரில் அங்கு குடியமர்த்தப்படுவர் - என்றார். (சி)

## உயிர் அச்சுறுத்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஆஜர்செய்யப்பட்டனர். இவர்களை யாழ். சிறையில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றத் தின் உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலை யில் வைக்கப்பட்டிருந்த எழுபதைந்துக்கும் மேற்பட்டவர்களில் சுமார் அரைவாசிப் பேர் சொந்த விருப்பத்தின் பேரில் வீடு திரும்பி யிருந்தனர்.

கடந்த ஒருமாதகாலமாக எவரும் மனித உரிமை ஆணைக்குழு ஊடாக நீதிமன்றத்தில் சரண் அடையவில்லை என்றும் -

மீண்டும் சரண் அடைவோர் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என்றும் - நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

BIOLOGY
A/L 2007
Model Exam
July 17&18
09 - 12 A/L
By:Kajan
Suren
Seminar
July 23-24
Futher the
Details
SUBRA (14)
ரிதன்வேனி

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**
**கோப்பாய் பிரதேச குருமார்களுடன் கலந்துரையாடல்**

**காலம்:** இன்று (14.07.2007) சனிக்கிழமை பி.ப 2 மணி
**இடம்:** நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான மண்டபம்
**தலைவர்:** பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
**விடயம்:** மாணவச் செல்வங்களின் சமஸ்கிருதக் கல்விச் செயற்பாடுகள்

குருமார்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பிரம்மஸ்ரீ யோ.பிரபாகரக் குருக்கள்

IIS

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I : 18.07.2007
பிரிவ II : 21.07.2007
பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

Dip. in Eng. Drawing & AutoCAD
விசேட பிரிவுகள் ஆரம்பம்.

இயக்குநர், IIS,
இல.100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses
Ms office
DTP
Hardware
Only Online batches
Certificate Courses
இவர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்
Kids Program
CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805

## கிராம மட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் தொடர்பாக அரச சமாதானச் செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

பல்வேறு அரசியல் கட்சிகளும் கையளித்துள்ள முன்மொழிவுகளைக் கொண்டு அரசியல் தீர்வு யோசனை ஒன்று தயாரிக்கப் படவிருக்கின்றது. இந்தப் புதிய தீர்வுத்திட்டம் அனைத்துக் கட்சி தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

### அரசமைப்புத் திருத்தம்

அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும்.

இது தொடர்பான யோசனைகளை முன் மொழிவதற்காகவே அனைத்துக் கட்சி தெரிவுக்குழு மற்றும் நிபுணத்துவக் குழு ஆகியன உருவாக்கப்பட்டன.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள பஞ் சாயத்து அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கல் முறை குறித்து ஆராய்வதற்கான அனைத்து கட்சிகளின் குழு இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

தேர்தல் முறை சீர்திருத்தம், இரண்டாவது மக்கள் பிரதிநிதிகள் சபையை நிறுவுதல், அரச சேவை மற்றும் பாதுகாப்புப் படையில் சேர்ந்து கொள்வோர் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்ற யோசனைகள் தொடர் பாகவும் அந்தந்த விடயங்களுக்காக நியமிக்கப் பட்ட குழுக்கள் ஆராய்ந்து வரு கின்றன - இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ-1)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இப் பேரணிக்கு வழங் கப்பட்ட அனுமதியை ரத்துச் செய்யுமாறு சில அமைப்புக்கள் லண்டன் ஆளுநரி டம் வேண்டுகோள் விடுத்துள்ளன என்று அறியமுடிகின்றது. கண்டனப் பேரணியை பிரித்தானிய நகராட்சி மன்றக் குழு அதன் உறுப்பினர்கள் மற்றும் ஈழத்தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (சி)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை

திதி:14.07.2007

மண்ணுலகில் எம் மாதாவாகிய தெய்வமே!
விண்ணுலகில் சென்று வருடங்கள் நான்காகியும்
எம் உலகம் நீங்கள் தானே தாயே!
கண்ணை இமை காத்தது போல்
அல்லும் பகலும் எம்மைக் காத்த தாயே!
இவ்வுலகின் அன்பே! எம்மைக் காத்த தாயே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களை மறக்க முடியுமா? முடியாதம்மா!

**தாயின் மடியில்:** 13.12.1936
**நாகம்மன் பாதத்தில்:** 29.06.2003

இல.26/2, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (62690)

நீங்கா நினைவுடன்
உருகும் உள்ளங்கள்.

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

### செல்லையா மதியாபரணம்

(உரிமையாளர், வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்)

பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
- நண்பருக்கு நட் பாய்
நமக்குத் தலைவனாய்
எம்மைவிட் டு ஏன் அகன்றீர்?
எம் பெருமான் திருவடி சேர்ந்தீரோ?

மலர்வு 24.02.1933
உதிர்வு 14.01.2007

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (62683)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சந்திரசேகரம் வரதராஜா

**(ஓய்வுபெற்ற ஊழியர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்)**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் வரதராஜா நேற்று (13.07.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் நீர்வேலி காலஞ்சென்ற வித்துவசிங்கம் மற்றும் விமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி ந.சிவபாக்கியம், அப்பையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரவிந்தன், திருமதி ம.சிவரூபினி (கனடா), அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாமாயனின் (கனடா) அன்பு மாமனும் பரிதி, வழுதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2007) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊமைக்கேணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சுழிபுரம் மேற்கு,*
*தொ.பே: 021 222 5721*

தகவல்:
ச.கணபதிப்பிள்ளை (சகோதரன்).
வ.அரவிந்தன் (மகன்).

### செல்வி வெனிற்றா றஞ்சினி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வெனிற்றா றஞ்சினி நேற்று (13.07.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரவியம் பிலிப் மாரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் லூட்ஸ் செல்வராசா, புஸ்பராணி (கனடா), யசிந்தா சூசைதாஸ் (வவா - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் A.E. செல்வராசா (கனடா), A.V.சூசைதாஸ் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.07.2007) சனிக்கிழமை பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*517/8, ஸ்ரான்லி வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org